## சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் ஏப்ரல் மாதம் (30.04.2020) ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 03/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.903, பதிவு செய்யப்பட்டது**

.

**பொருள்.2**

கூடலூர் நகராட்சியில் இயங்கி வரும் நவீன ஆடடிமனையின் **WATER AND AIR ACT RENEWAL** 2020-2021 ஆம் ஆண்டிற்குரிய கேட்புத்தொகை ரூ.8800/-ஐ தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு நிறுவனத்தாருக்கு செலுத்த வேண்டி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் , தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம் தேனி அவர்களின் கடித எண் FTEN0378/RS/DEE/TNPCB/TEN/2020 நாள்.24.02.2020ன்படி வரப்பெற்றுள்ளது மேற்படி கட்டணத்தினை தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.1261/2019/இ1)**

**அலுவலகக் குறிப்பு : –**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.904,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சியில் 2020–21 ஆம் ஆண்டில் வழங்கக்படவுள்ள புதிய குடிநீர்க்குழாய் இணைப்புகளுக்குரிய சாலை சீரமைப்புக் கட்டணம் ஏற்கனவே உள்ள கட்டணத்திலிருந்து 5% கூடுதலாக கீழ் காணுமாறு உயர்த்திட மன்றத்தின் அனுமதிக்கு, **( ந.க எண்: 765/2020/இ2)**

| வ எண் | சாலையின் விபரம் | தற்போதுள்ள தொகை (ரூ) | உயர்த்த வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | **0–30 மீட்டர் நீளத்திற்கு** | | |
| | A) கருங்கல் சாலை | ரூ 1712.00 | ரூ 1798.00 |
| | B) தார்ச்சாலை | ரூ 3669.00 | ரூ3852.00 |
| | C) சிமெண்ட் சாலை | ரூ 4312.00 | ரூ 4528.00 |
| 2 | **30– 90 மீட்டர் நீளத்திற்கு** | | |
| | A) கருங்கல் சாலை | ரூ 2690.00 | ரூ 2825.00 |
| | B) தார்ச்சாலை | ரூ 4671.00 | ரூ4905.00 |
| | C) சிமெண்ட் சாலை | ரூ 5227.00 | ரூ 5488.00 |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.905,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சியில் மொத்தம் 6 உயர்மின் கோபுர விளக்குகள் உள்ளன.அவற்றில் 5 உயர்மின் கோபுர விளக்குகளில் உள்ள அனைத்து விளக்குகளும் LED விளக்குகளாக அமைந்துள்ளன.வார்டு எண்-19,வடக்குரதவீதி மற்றும் வார்டு எண்-18,காமாட்சியம்மன் கோயில் தெரு சந்திப்பில் உள்ள உயர்மின் கோபுர விளக்கில் M.H விளக்குகள் உள்ளன அதனை LED விளக்குகளாக மாற்றிடவும் அனைத்து உயர்மின் கோபுரவிளக்குகளை பராமரிப்புக்கு பயன்படுத்த 6 LED விளக்குகள்

வாங்கி இருப்பில் வைக்கவும் ரூ.2,50,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண்.647/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.906,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாராக பதிவு செய்து தருமாறு திரு.சு.கணேசன் த/பெ சுருளியாண்டிகவுடர், கூடலூர் அவர்கள் விண்ணப்பித்துள்ளர். அன்னாரை இந்நகராட்சியில் ஐந்தாம் நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண்.764/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.907,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாண்பு மிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் பதிவு பெற்ற ஒவ்வொரு தெருவோர வியாபாரிகளுக்கும் தலா ரூ.1000/- வீதம் 34 நபர்களுக்கு ரூ.34,000/- வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.25715/2019/UPA1 நாள்.02.04.2020ன்படி உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் வரப்பெற்ற வரவினத்திற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண்.1666/2016/எப்1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.908,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், கட்டுமானப் பணிகள் நடைபெறக்கூடிய கட்டிங்களின் நுழைவு வாயிலில் கட்டிடத்தின் விபரப்பலகையினை சம்மந்தப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளர் மூலம் (Display Board) வைக்கப்பட வேண்டும் எனவும், அதற்க்குரிய வைப்புத்தொகையினை கீழ்க்காணுமாறு வசூலிக்கப்பட வேண்டும் எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின்படி, நகரமைப்பு பிரிவு துணை இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களால் 25.02.2020 அன்று நடைபெற்ற பயிற்சி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்காணும் விபரப்படி வைப்புத்தொகையினை 01.04.2020 முதல் வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.819/2019/எப்1)**

**<u>வைப்புத்தொகை விபரம்</u>**

1. குடியிருப்பு கட்டிடம் ( 3000 ச.அடி வரை) - ரூ.1500/-
2. வணிக கட்டிடம் ( அனைத்து சதுர அடிக்கும்) - ரூ.10,000/-

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.909,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சியில் நகராட்சி சட்டம் 1920 பதிவேட்டில் உள்ள விபரப்படி செலவினங்கள் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் வரிசை எண்-51 முதல் 63 முடிய மேற்கொள்ளப்பட்ட செலவின விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். **(ந.க.எண்.3945/2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.910,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-21 குமுளியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 சிறு உயர்மின்கோபுர விளக்குகள் அமைக்க 28.01.2019 ஆம் நாள் நகர் மன்ற தீர்மான எண்-504ன்படி நிர்வாக அனுமதியின்படி 15.02.2019 ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்த **M/S N.M.INDUSTRIES**, நிறுவனத்தாரின் ஒப்பந்தபுள்ளி நகர்மன்ற தீர்மான எண்-529 நாள்.22.02.2019ன்படி அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி 22.02.2019 ஆம் நாள் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.மேற்படி பணியினை ஆரம்பிக்கும் போது வனத்துறையினரால் ஆட்சேபம் தெரிவிக்கபட்டதன் அடிப்படையிலும் வனத்துறையினரால் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க தடையின்மை சான்று வழங்காத காரணத்தினாலும்.மேற்படி 2 உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்கும் பணியினை அதே வார்டு எண்-21ல் உள்ள லோயர் கேம்பில் அதே மதிப்பீட்டு தொகையில் ஒப்பந்ததாரர் **M/S N.M.INDUSTRIES** நிறுவனத்தாரின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.217/2019/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம் .

**தீர்மான எண்.911,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சியில் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கனிணிகள்,பிரிண்டர்களில் அவ்வாபோது ஏற்படும் பழுதுகளை தேவையான உதிரி பாகங்கள் பொருத்தி பழுதுநீக்கம் செய்திடவும் மற்றும் பிரிண்டர்களில் பயன்படுத்த கூடிய காலியான Toner Refil செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.575. நாள் 08.03.2019ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 30.01.2020 ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். **(ந.க.எண்.866/2019 /இ1)**

| வ.எண் | வேலை விபரம் | விலைபுள்ளி தொகை | | |
|---|---|---|---|---|
| | | **BARANI SYSTEM SERVICE CUMBUM** | **YES CARE SYSTEM SERVICE CUMBUM** | **MICRO SYSTEM SERVICE CUMBUM** |
| 1. | TONER ஒன்றுக்கு Refil செய்வதற்கு 1க்கு | ரூ.400/- | ரூ.450/- | ரூ.500/- |
| 2. | HP 202 dm Teflon Presser Roller 1க்கு | ரூ.2000/- | ரூ.2100/- | ரூ.2125/- |
| 3. | Cannon LBP 3300 Printer Presser Roller 1க்கு | ரூ.3500/- | ரூ.3600/- | ரூ.3650/- |
| 4. | OS Installation for one System | ரூ.600/- | ரூ.675/- | ரூ.715/- |
| 5. | RAM மாற்றி தருவதற்கு RAM நீங்களாக | ரூ.300/- | ரூ.350/- | ரூ.375/- |
| | மொத்தம் | ரூ.6,800/- | ரூ.7,175/- | ரூ.7,365/- |

**அலுவலக குறிப்பு: –**

வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **BARANI SYSTEM SERVICE** கம்பம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.912,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.11**

கூடலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உளகளாவிய தொற்று நோய் கொரோனா வைரஸ் தொற்று நோயினை தடுப்பதற்கான பணியில் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தனிமை படுத்தப்பட்ட பகுதிகளான லோயர்கேம்ப் அரசு உயர் நிலைப்பள்ளி வளாகம் மற்றும் NSKP பள்ளி வளாக பகுதியில் பணி புரியும் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் பயன்படுத்தப்படும் முக உறை, கை உறை மற்றும் அப்பகுதியில் சேகரமாகும் BIO - MEDICAL WASTE, அன்றாயடம் சேகரமாகும் Napkin, Fase Mask, போன்ற கழிவுகளை முறையாக அப்புறப்படுத்த சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிறுவனமான ராம்கி ஏஜென்சி, மதுரை அவர்களிடம்

ஒப்பந்தம் செய்து முறையாக அப்புறப்படுத்திடவும் அதற்காக ஒரு மாதத்திற்கு கட்டணமாக ரூ.20,000/– ஐ மேற்படி நிறுவனர்த்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**(ந.க.எண்.814/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தைநகராட்சியின் வருவாய்நிதியிலிருந்துமேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.913,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.12**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன் படுத்தப்பட்டு வரும் இலகரகவாகனம் (LCV) TATA ACE வாகன எண்.TN 60 AY 4473 க்குரிய தகுதிச்சான்று **30.06.2020** ஆம் நாளுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தினை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த வேண்டிய கட்டணங்களை அரசுக்கு செலுத்திடவும் மற்றும் வருடாந்திர தகுதிச்சான்று பெற்றிடவும் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.**1,00,000/–** க்குமன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.815/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.914,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன் படுத்தப்பட்டு வரும் இலகரக வாகனம் (LCV) TATA ACE வாகன எண்.TN 60 AY 4486 க்குரிய தகுதிச்சான்று **30.06.2020** ஆம் நாளுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தினை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த வேண்டிய கட்டணங்களை அரசுக்கு செலுத்திடவும் மற்றும் வருடாந்திர தகுதிச்சான்று பெற்றிடவும் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.**1,00,000/–** க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.816/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.915,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.14**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கனரக வாகனம் ஈச்சர் டிப்பர் லாரி வாகன எண்.TN 60 AY 3850 க்குரிய தகுதிச்சான்று **30.06.2020** ஆம் நாளுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தினை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த வேண்டிய கட்டணங்களை அரசுக்கு செலுத்திடவும் மற்றும் வருடாந்திர தகுதிச்சான்று பெற்றிடவும் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.**98,000/–**க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**(ந.க.எண்.819/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.916,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.15**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுவரும் கட்டிடங்களுக்கு, உரிய கட்டிட வரைபட திட்ட அனுமதி பெற வேண்டி இந்நகராட்சியின் மூலம் அறிவிப்பு வழங்குவதற்கு,நோட்டீஸ் அச்சிடப்படுவதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.**5000/-**க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.810/2020/எப்1)**

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.917,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.16**

இந்நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் உலகளாவிய தொற்று நோயாக அறிவிக்கப்பட்டுள்ள கொரோன வைரஸ் பரவுவதை தடுக்க பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொது மக்களும்,வியாபாரிகயும் முகக்கவசம் அணிவது அவசியம் என்பதால் கொள்ளை நோய் சட்டம் 1897,தமிழ்நாடு பொது சுகாதாரம் சட்டம் 1920 சட்டப்பிரிவு 306 (25-ன்படி) கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் முகக்கவசம் அணியாததற்கு அபராத தொகை ரூபாய்.100/- வசூலிப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.805/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.918,அனுமதிக்கப்பட்டது.**